வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———————— ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 14.02.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 46 | பக்கங்கள் : 12

# வடக்கு காற்றாலை மின்திட்டத்தை கைவிட்டுள்ளது அதானி நிறுவனம்!

## தொடர்ந்து ஏற்பட்ட தடைகளை அடுத்து

சென்னை, பெப்ரவரி 14

**இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் அமைக்கப்பட இருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்துக்கு அனுமதி வழங்குவது, அதன் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து சட்டப்போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில் அந்தத் திட்டத்தில் இருந்து அதானி கிறீன்ஸ் நிறுவனம் விலகியுள்ளது.**

இது குறித்து 'த இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உள்ளூர் ஆய்வுகள் மற்றும் விமர்சனங்களைத் தொடர்ந்து இந்தியாவுக்கு வெளியே அண்டை நாட்டில் அதானி நிறுவனம் மேற்கொண்ட முதலீட்டில் இருந்து பின்வாங்கி இருப்பதை நிறுவனத்தின் இந்த முடிவு சுட்டிக்காட்டுகிறது. அதானி குழுமத்தின் இந்த முடிவு

இலங்கையின் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கான வெற்றியாக கருதப்படுகிறது. கடந்த 2024ஆம் செப்ரெம்பரில் நாட்டின் உயர் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக, இந்த திட்டத்தை ரத்து செய்வேன் என்று சபதம் செய்திருந்தார். என்றாலும், அவரது அரசு அமைந்ததும், திட்டத்தை மறுபரிசீலனை செய்யும் விருப்பத்தை

11

## உள்ளூராட்சி சபை தேர்தல் தீர்ப்பு இன்று பாராளுமன்றுக்கு

கொழும்பு, பெப். 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்படி,எதிர்வரும் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் உரிய தீர்மானம் தொடர்பான விவாதம் நடத்தப்பட உள்ளது.

இது தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதற்கு அடுத்த

11

## சென்னை - யாழ். விமான சேவையை மேலும் அதிகரிப்பதற்கு தீர்மானம்!

யாழ்ப்பாணம், பெப். 14

இந்தியாவின் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வரை முன்னெடுக்கப்பட்டு வரும் விமான சேவைகளை மேலும் அதிகரிப்பதற்கு இந்திய விமான நிறுவனமான இண்டிகோ தீர்மானித்துள்ளது.

இண்டிகோ விமான நிறுவன அதிகாரிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த விடயம்

11

## உள்ளூராட்சி சபை தேர்தலை ஏப்ரல் 3ஆம் வாரத்தில் நடத்துக

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, பெப். 14

ஏப்ரல் மாதம் 3 ஆம் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் தேர்தல்கள் ஆணைக்குழுவில் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த கோரிக்கையை முன்வைப்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்றிருந்தனர்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து

11

## இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவந்த 2 திட்டங்களை ரத்து செய்த அமெரிக்கா

நியூயோர்க், பெப். 14

காலநிலை மாற்ற சவால்களை சீராகக் கையாள்வது தொடர்பான ஆசிய பசுபிக் மற்றும் கலாசாரங்களுக்கு இடையிலான தொடர்பாடலை ஊக்குவிக்கும் திட்டங்களை இரத்து செய்ய அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும் ட்ரம்ப் நிர்வாகத்தின் முக்கிய அதிகாரியுமான எலான் மஸ்க் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அரசாங்க செயற்திறன் திணைக்களத்தின் ஆணையாளராக செயல்படும் எலான் மஸ்க், இந்த திட்டங்கள் உட்பட உலகளாவிய ரீதியில் 199 திட்டங்களை பயனற்ற திட்டங்களாக கருதி நிறுத்தும் உத்தரவை பிறப்பித்துள்ளார். (அ)

## 17 ஆம் திகதி பட்ஜெட் முன்வைப்பு

## ஜனாதிபதி அநுர தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 14

எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான இறுதிக் கட்டத்தின்

11



## இன்று யாழ். வருகிறார் கனடிய தூதுவர்

யாழ்ப்பாணம், பெப். 14

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

அவர் இன்று காலை 9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

ஆளுநரின் சந்திப்பைத் தொடர்ந்து யாழ். நகரின் மத்தியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் இடம்பெறும் ஒரு நிகழ்விலும் அவர் பங்குகொள்கிறார். (அ)

## தையிட்டி விகாரை தொடர்பில் சம்பந்தப்பட்டோருடன் பேச்சு!

### பௌத்தசாசன அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப். 14

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை தொடர்பில் இராணுவத்தினருடனும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும் பேச்சுகளில் ஈடுபடவுள்ளதாக பௌத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விவகாரமானது, தேசிய ஐக்கியம் தொடர்பில் உணர்வுபூர்வமானதாக காணப்படுவதை கருத்தில் கொண்டு, இது தொடர்பில்

11

### லசந்த விக்கிரமதுங்க கொலை:

## சட்டமா அதிபரின் பரிந்துரை தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 14

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கில் மூன்று சந்தேக நபர்களை விடுவிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு சட்டமா அதிபர் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கில் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக இனி சட்ட நடவடிக்கை தேவையில்லை

11

## தமிழ் அரசு கட்சியின் வழக்கு 4 மாதங்களுக்கு ஒத்திவைப்பு!

திருமலை, பெப். 14

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு அதன் எதிராளி ஒருவரை ஆள்மாற்றம் செய்ய இடமளிப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதிக்குத் ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் எதிராளி ஒருவரை மாற்றுவது குறித்துத் தீர்மானிக்கப்படும். அதன் பின்னரே வழக்கின் விசாரணை பற்றி ஆராயப்படும்.

நேற்று இந்த வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி பயஸ் ரஸாக்

11

## அதிகூடிய அதிகார பரவலாக்கலும் போதிய நிதி ஒதுக்கீடும் வேண்டும்!

### இலங்கை தமிழ் அரசு கட்சி வலியுறுத்து

மட்டக்களப்பு, பெப். 14

மாகாண சபை முறைகளின் முறையற்ற அதிகாரப் பரவலாக்கலும் ஆகக் குறைந்த நிதி ஒதுக்கிடுகளும் கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறை உட்கட்டமைப்பு பற்றாக்குறைக்கு முக்கியமான காரணங்களாக காணப்படுவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர். இ. சிறிநாத் தெரிவித்தார்.

அதி கூடிய அதிகார பரவலாக்கலும்

11

## ஐ.நா. வதிவிட பிரதிநிதி மார்க் டான் அலுவலகத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், பெப். 14

ஐக்கிய நாடுகளின் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ நேற்று டான் தொலைக்காட்சி அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

இலங்கையில் பணிபுரியும் ஐக்கிய நாடுகள் அமைப்புகளின் தலைவர்கள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

ஐக்கிய நாடுகளின் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ தலைமையில் இலங்கையில் பணி புரியும்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் மீது சட்ட நடவடிக்கை சட்டமா அதிபரிடம் ஆலோசனை!

## நீதிமன்றத்தில் கூறியது சி.ஐ.டி.

கொழும்பு, பெப். 14

**நிதி மோசடி குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சந்தேக நபர்கள் குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.**

பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது சட்டவிரோதமான வழிகளில் சம்பாதித்ததாகக் கூறப்படும் 15 மில்லியன் தொகையை என். ஆர். கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிடெட்டில் முதலீடு செய்ததன் மூலம் பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் நாமல் ராஜபக்ஷ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஏனைய மற்ற சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் முடிந்துவிட்டதாகவும் வழக்கின் விசாரணை முடிவுகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளபோதிலும், சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கவில்லை என குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, வழக்கை ஓகஸ்ட் 07 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட நீதிவான், அந்தத் திகதியில் சட்டமா அதிபரின் ஆலோசனையை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.14

விதையனைத்தும் விருட்சமே செயல்திட்டம் ஊடாக யாழ். மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு கடந்த 9 ஆம் திகதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைத்துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தினர் வன்னிப்பட்டறை உதவிக்கரம் ஊடாக வழங்கினர். (எ-05)



# எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து பெண் எம்.பிக்கள் ஒன்றியம் ஆய்வு

கொழும்பு, பெப். 14

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் எதிர்கால செயல்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடும் கூட்டம் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் ஒன்றியத்தின் தலைவர் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

மாகாண மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக வரும் வகையில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஒன்றியத்தில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, எதிர்வரும் தேர்தலில் அந்த முன்மொழிவை செயல்படுத்தும் வகையில் தற்போது காணப்படும் சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான அவசியம் தொடர்பில் ஒன்றியத்தில் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# பாராளுமன்றத்தில் பெண் ஊழியர்களுக்கு பாலியல் துன்புறுத்தல் குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 14

பாராளுமன்றத்தில் சில பெண் ஊழியர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாகக் கூறப்படுவது குறித்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயம் குறித்து பெண் பாராளுமன்ற உறுப் பினர்கள் ஒன்றியத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சமிந்த்ராணி கிரியெல்ல தெரிவித்தார்.

இந்த சம்பவத்தை வெளிப்புற விசாரணைக்கு பரிந்துரைக்குமாறு சபாநாயகரிடம் கோர தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஒரு நிறுவனம் அல்லது ஏனைய நிறுவனங்களில் இதுபோன்ற சம்பவம் பதிவாகிய பிறகு, வெளிப்புற விசாரணையை பரிந்துரைப்பது வழக்கமான நடைமுறை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பான உள்ளக விசாரணைகள் இன்று காலை ஆரம்பிக்கவுள்ளன. (அ)

# இலங்கை மாணவர்களுக்கு இந்தியா 200இற்கும் மேற்பட்ட புலமைப்பரிசில்

கொழும்பு, பெப். 14

இந்திய தூதரகத்தின் முழுமையான அனுசரணையுடன் வழங்கப்படும் 200இற்கும் அதிகமான புலமைப்பரிசில்களுக்கு பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மருத்துவம் / துணை மருத்துவம், நவநாகரிக வடிவமைப்பு, மற்றும் சட்டத்துறை சார்ந்த கற்கைகள் தவிர்ந்த பல்வேறு துறைகளில் முன்னணி இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வியை கற்பதற்காக இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இலங்கை பிரஜைகளுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் இப்புலமைப்பரிசில்கள் 2023-2024 கல்வி ஆண்டுக்கானது.

இந்த திட்டத்தின் கீழ் பின்வரும் கற்கைநெறிகளுக்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல், வணிகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட அனைத்து பட்டப்படிப்பு / பட்டமேற் படிப்பு / முதுமாணி (Undergraduate / Post Graduate & PhD ) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் முதுமாணி பட்டப்படிப்புகள்.

ராஜிவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம்: B.E அல்லது B.Tech பட்டப் படிப்புகளுக்கு வழிசமைக்கும் 'தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கை நெறிகள்.

அனைத்துப் புலமைப் பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம், மற்றும் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஏனைய பல்வேறு அனுகூலங்களுடன் இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பனவும் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு குறித்த பல்கலைக் கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப் படும்.

இந்தப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசாங்கம் தெரிவு செய்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு தகுதிவாய்ந்தவந்தவர்களை தெரிவு செய்யும் செயற்பாடுகள் இலங்கை கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பாக தேவையான தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இந்த கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் இலங்கை கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் ஆகியவற்றை அணுகி தகவல்களைப் பெறமுடியும். (அ)

# நகுலேஸ்வரத்தில் கொடியேற்றம்!





யாழ்ப்பாணம், பெப். 14

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது.

காலை 7.00 மணியளில் ஆரம்பமான அபிஷேகத்தையடுத்து காலை 9.00 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 10 .00 மணிக்கு வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

15 தினங்களைக் கொண்ட மகோற்சவத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி இரவு பெரிய சப்பைரதத் திருவிழாவும், 26ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், அன்றிரவு சிவராத்திரி சிறப்பு பூசை வழிபாடுகளும் இடம்பெற்று மறுநாள் 27ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.02.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும்போது...!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கின்றார். இந்தியாவிலிருந்து பிறிதொரு நாட்டுக்கு செல்ல முற்பட்டபோதே அவர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் சில குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட நிலையிலேயே அவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். ஒரு காலத்தில் தமிழ் மிதவாத தலைவர்கள் பலர் சிறை சென்றிருக்கின்றனர்.

அவர்களில் ஒரு சிலர் பல மாதங்கள் வரையில் மக்களுக்காக சிறை வாழ்வை அனுபவித்திருக்கின்றனர். அண்மையில் காலஞ்சென்ற மாவை. சேனாதிராசா சிறை வாழ்விலிருந்து விடுதலையானபோது கட்சியின் ஆதரவாளர்களும் மக்களும் அதனைக் கொண்டாடியிருந்தனர். மக்களுக்காக சிறை செல்லும் வரலாற்றை கொண்டிருக்கும் ஈழத்தமிழர் அரசியலில் கிரிமினல் குற்றங்களுக்காக சிறை செல்லும் நிலைமை உருவாகியிருக்கின்றது அத்துடன், பாரம்பரிய கட்சி - பிரதான கட்சியென்று வர்ணிக்கப்படும் இலங்கை தமிழ் அரசு கட்சி நீதிமன்றத்துடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவான ஈழத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளை ஒரு காலத்தில் கேட்பதே பெருமையாக நோக்கப்பட்டது - அமிர்தலிங்கத்தின் உரையை கேட்டு, சபாநாயகரே அற்புதமென்று பாராட்டிய வரலாறு போய், பொழுது போகவில்லையா, யாழ்ப்பாணத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சை சிறிது கேட்போம் - வாய்விட்டு சிரிக்கலாம் என்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது. இதற்கு உண்மையில் பொறுப்பானவர்கள் யார்?

அரசியல்வாதிகளிலும் அரசியல் கட்சிகளிலும் தவறு கண்டுபிடிப்பதை விடவும் வாக்களிப்பவர்கள் தொடர்பில்தான் நாம் சந்திக்க வேண்டியிருக்கின்றது. ஒரு காலத்தில் நவரட்ணம், தர்மலிங்கம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் என்றவாறு தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து உறுப்பினர்களை தெரிவு செய்த வடபுல மக்கள் இன்று எவ்வாறு சந்திக்கின்றனர்? எவ்வாறானவர்களைத் தெரிவு செய்கின்றனர்? தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் என்றவுடன் பார்த்துப் பார்த்து மாப்பிள்ளை, மணமகள் தேடும் ஈழத்தமிழினமோ தங்களின் அரசியல் எதிர்காலத்துக்கான நபர்களை தெரிவு செய்யும்போது, கண்களில்லாதவர்கள் போன்று வாக்களிக்கின்றது. இந்த நிலைமை மாறாத வரையில் ஈழத் தமிழினம் அரசியலில் உருப்படியான வழியேற்படப் போவதில்லை.

தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களை பெற்றுவிட்டது. எனவே, பிரதிநிதித்துவங்கள் உறுதியாகிவிட்டன என்று பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை - உண்மையில், இன்றைய அரசியல் சூழலை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலுடன் கூடியவர்களை தமிழினம் தெரிவு செய்திருக்கின்றதா - என்றுதான் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் பூச்சியமே எஞ்சும். பாராளுமன்றம் சென்றிருப்பவர்களில் அநேகரை ஓர் அரசியல்வாதியாகக்கூட தென்னிலங்கை ஏற்றுக்கொள்ளுமா என்பதே சந்தேகம்தான். அந்தளவுக்கு தலைமைத்துவ பலவீனம் மேலோங்கியிருக்கின்றது.

ஒரு தனித் தலைவர் இல்லாத சூழலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பீட்டடிப்படையில் தலைமையற்ற சூழலை ஒப்பீட்டடிப்படையில் நிவர்த்தி செய்யக்கூடிய ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், கண்களில்லாதவர்கள் போன்று தமிழ் மக்கள் வாக்களித்த காரணத்தால் விடயங்களை கையாளும் தலைமைத்துவ ஆற்றல் இல்லாதவர்களே பெரும்பான்மையாக பாராளுமன்றம் செல்ல நேர்ந்திருக்கின்றது.

## தேசிய ஒருமைப்பாட்டு செயலகத்தினர் யாழில் முதலீட்டாளர்களுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப்.14

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தால் முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றைய தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் தலைவர் விஜித் ரொஹான் பெர்னாண்டோவும் கலந்து கொண்டனர்.

இதில், தலைமை உரையாற்றிய அரச அதிபர், யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் இணைந்துள்ள தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்து கலந்துரையாடி தீர்வுகாணவும் ஆக்கபூர்வமான கருத்துகளை பகிர்வதுமே இந்தக் கூட்டத்தின் நோக்கம் எனவும், முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளை தீர்த்து ஒழுங்குபடுத்துவதே அரச பணியாளர்களின் நோக்கமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது, முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாகவும் அதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு, முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளை அழைத்து சீரான காலஇடைவெளிகளில் கலந்துரையாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ)

## முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டும்

### அரச அதிகாரிகளுக்கு றஜீவன் எம். பி. அறிவுரை

யாழ்ப்பாணம், பெப்.14

முதலீட்டாளர்களை அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈர்க்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தெரிவித்தார்.

முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், “கிளீன் சிறீலங்கா” செயல்திட்டமானது சூழலை சுத்தப்படுத்துவது மட்டுமல்ல. மனங்களிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். முதலீட்டாளர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் எவ்வாறு என்ன அடிப்படையில் உதவிகள் வழங்கலாம் என்று முயற்சி செய்து முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டும்- என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சன்துனி ஆரியவன்ச, உதவிப்பணிப்பாளர் சுசந்த குமார, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், வர்த்தக முகாமைத்துவ குழுவின் தலைவர், வர்த்தக கைத்தொழிலாளர் சங்கத்தின் தலைவர், முதலீட்டாளர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ-05)

## திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.14

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசக சிறப்பு சொற்பொழிவுத் தொடர் - 44 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் இன்று 14 வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குருவணக்கத்தை தொடர்ந்து இளஞ்சைவப்புலவர் த. மனோஜ் குமார் “மாணிக்கவாசகரும் எண்ணப்பத்தும்” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## அரசுக்கு நெல் வழங்காத விவசாயிகள்

கொழும்பு, பெப். 14


விவசாயிகள் எவரும் இதுவரை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லை வழங்கவில்லை என நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்லந்த தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் அறுவடையை ஆரம்பிக்காத காரணத்தினால் இவ்வாறு களஞ்சியசாலைகளுக்கு நெல் கிடைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் 10 நாட்களுக்குள் குறித்த பிரதேசங்களில் விவசாயிகள் அறுவடையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நெல் கொள்வனவுக்காக, நெல் சந்தைப்படுத்தல் சபையின் சுமார் 80 களஞ்சிய சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

பெப்ரவரி -14 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - மாசி 02
நல்ல நேரம்:9.00 -10.30
ராகு காலம்:10.30 -12.00
திதி :துவிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர் கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். நட்பால் ஆதாயம் உண்டு.

**இடபம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப் பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர் பாசமழை பொழிவார்கள். அதி கார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும் பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களிடம் மனஸ் தாபங்கள் வந்து நீங்கும். அரசு காரியங்கள் தாம தமாக முடியும். வாகனம் தொந்தரவு தரும்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் வேலை யாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர்கள், நண்பர் களால் ஆதாயமுண்டு. சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். நயமாகப் பேசுபவர் களை நம்ப வேண்டாம். வியாபாரத்தில் ஒப்பந் தங்கள் தள்ளிப் போகும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனை விக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல் படுவார்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதக மாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண் பர்களின் வருகையால் வீடு களைகட்டும். வழக் கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# பூப்பந்தாட்ட பயிற்சியாளர்களுக்கு வடமாகாணத்தில் பயிற்சி முகாம்



வவுனியா, பெப்.14

வடமாகாணத்தில் முதன்முறையாக பூப்பந்தாட்ட பயிற்சியாளர் தரம் ஒன்றிற்காக நான்கு நாட்கள் பயிற்சி முகாம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி வவுனியா - ஓமந்தை உள்ளக விளையாட்டரங்கில் நடை பெற்று வருகின்றது.

குறித்த பயிற்சி முகாமானது வவுனியா மாவட்ட பூப்பந் தாட்ட சங்கத்தின் வேண்டுகோ ளுக்கு அமைவாக இலங்கை பூப்பந்தாட்ட சங்கத்தின் ஏற் பாட்டில்,

இலங்கை பூப்பந் தாட்ட பயிற்சி மேம்பாட்டு சங்கத்தால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

இதன்போது, இலங்கை பூப்பந்தாட்ட பயிற்சி மேம் பாட்டு சங்கத்தின் தலைவர் புத்திக்க டி சில்வா, வடமா காண பூப்பந்தாட்ட சங்கத்தின் இணைப்பாளர் தே. கமலன், ஓமந்தை விளையாட்டு மைதான இணைப்பாளர் தனுராஜ், பயிற் றுவிப்பாளர்கள் மற்றும் வட மாகாண பூப்பந் தாட்ட சங்கத் தின் முக்கியஸ் தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்புக்கு வெளியே முதன்முறையாக நடைபெறும் இப்பயிற்சி முகாமில் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாகா ணங்களிலிருந்து பயிற்சியாளர் கள் கலந்து கொண்டுள்ளனர். (எ-10)

# சான்றிதழ் வழங்கலும் நூல் வெளியீடும்



கிளிநொச்சி, பெப்.14

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் 13 உறுப்பினர்க ளுக்கான நிலையான வைப் புச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும், குறித்த அமைப்பின் பழமரக்கன்றுகள் வழங்கும் செயல்திட்டத்துக்கு நிதியுதவி வழங்கி வருகின்ற இ. தெய் வேந்திரனின் பழமரக்காடுகள் நூல் வெளியீடும் கடந்த 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் துணைத்தலைவர் கி. மகிந்தகுமார் நூல் வெளி யீட்டு உரையை நிகழ்த்த, தலை வர் நூலை வெளியிட்டு வைத் தார். இதில், பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்ட கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட துடன் சிறப்புரை ஆற்றினார்.

சான்றிதழ்களை சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட திருமதி மங்கையற் கரசி கனகசபை முதலானோர் வழங்கினர். (எ)

# தைப்பூசத்தை முன்னிட்டு ஏடு தொடக்கல்



வவுனியா, பெப்.14

தைப்பூச தினமான கடந்த 11 ஆம் திகதி வவுனியா இந்து மாமன்றத்தால் பொங்கல் விழாவும் ஏடு தொடக்க நிகழ் வும் நடைபெற்றது.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள இநது மாமன்ற கட்டடத்தில் அதன் தலைவர் த. பரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் பல சிறுவர், சிறுமிகளுக்கு ஏடு தொடக்க நிகழ்வு நடைபெற்ற தோடு பாடசாலை மாண வர்களுக்கான கற்றல் உபகர ணங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை, புது அரிசி எடுத்து பொங்கலும் கலாசார பாரம்பரிய முறையில் நடை பெற்றது.

இதில், இந்துமாமன்ற நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-10)



யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 11 ஆம் திகதி கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. அதிபர் எம். அன்ரன் அமலதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லையா இளங்கோ கலந்து சிறப்பித்தார்.

(படங்கள் :- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்கள் படுகொலை அரசால் நீதி நிலைநாட்டப்படும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 14

**ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் எனவும், இது விடயத்தில் நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியவை வருமாறு-ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவு பெறவில்லை. அவை நடைபெற்று வருகின்றன. விசாரணையில் தெரியவரும் விடயங்களுக்கு அமைய தொடர்புடையவர்களுக்கு வழக்கு தொடரப்படும்.

குற்றவாளிகளை பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு நீதி அமைச்சருக்கு கிடையாது. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும், வழக்கு தொடுக்கும் விடயத்தில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்து ஜனாதிபதியும் பேச்சு நடத்தி வருகின்றார். எனவே, நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும். இது விடயத்தில் எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை-என்றார். (அ)

# குரங்கு மோதியதன் காரணமாக மின்தடை ஏற்பட வாய்ப்பில்லை!

கொழும்பு, பெப். 14

குரங்கு மோதியமையால் மின் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குரங்கு மோதியமையால் நாடு தழுவிய மின் வெட்டு அமுலாவதற்கு சாத்தியமில்லாத நிலைப்பாடே காணப்படுகின்றது.

பாரிய நிதி செலவில் நிர்மாணிக்கப்பட்ட பெலவத்தை மின் முகாமைத்துவ கட்டமைப்பு உள்ளது.

அதனை உரியவாறு முகாமை செய்வதன் ஊடாக நாடு தழுவிய ரீதியில் மின்சாரத்தை 24 மணிநேரமும் விநியோகிக்கக்கூடிய நிலைப்பாடு காணப்படுகின்றது.

புத்தளத்தில் அமைந்துள்ள லக்விஜய மின்உற்பத்தி நிலையம் ஏன் செயலிழந்துள்ளது என்ற சிக்கல் நிலை காணப்படுகின்றது.

11 வருடங்களாக குறித்த மின்னுற்பத்தி நிலையம் இயங்குகின்றது.ஆனால் குரங்கு மோதியமையால் ஏற்பட்ட மின்வெட்டின் காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார்.

# பாதுகாப்பு அதிகாரி கத்தி காட்டி மிரட்டல்

## அரச அச்சகத்தில் பதற்றம்

கொழும்பு, பெப். 14

அரச அச்சக திணைக்களத்தில் நேற்று காலை பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

அரச அச்சகத் திணைக்களத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் உணவு உட்கொள்ள முடியாது எனத் தெரிவித்து ஊழியர்கள் திணைக்களத்தின் வளாகத்திலிருந்து வெளியே செல்ல முற்பட்டுள்ளனர்.

இதன்போது அச்சகத்தின் தலைமை பாதுகாப்பு அதிகாரி அவர்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனால் அந்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# உபபொலிஸ் பரிசோதகர் உட்பட மூன்று பேர் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கைது !

கொழும்பு, பெப். 14

மீகொடை, கொடகம சந்திக்கு அருகில் 1,130 மில்லி கிராம் கொக்கெய்ன் போதைப் பொருளுடன் உப பொலிஸ் பரிசோதகர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுக்கை குருகல பிரதேசத்தைச் சேர்ந்த அரச புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகரே கைது செய்யப்பட்டுள்ளார்.

மீகொடை, கொடகம சந்திக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 1,130 மில்லி கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், கொக்கெய்ன் போதைப்பொருள் விற்பனை செய்வதற்காக கொண்டுவரப்பட்டதாகவும், அதனை கொள்வனவு செய்வதற்காக உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கொடகம சந்திக்கு வரவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொக்கெய்ன் போதைப்பொருளை கொள்வனவு செய்ய சென்ற உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாட்டில் 2 ஆயிரம் வைத்தியர்கள் சுகாதார சேவையிலிருந்து விலகல்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 14

நாட்டில் 2,000 வைத்தியர்கள் சுகாதார சேவைகளிலிருந்து விலகிக்கொண்டதாகவும் சுமார் 5,000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறவுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் மருந்து விநியோகத்தர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு பாரிய சிக்கல்கள் எதிர்கொள்ள நேரிடும் என்றும் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

சங்கத்தின் செய்தித் தொடர்பாளரான வைத்தியர் சமில் விஜேசிறி தெரிவிக்கையில்-சேவையிலிருந்து தங்களை விலக்கிக்கொண்ட வைத்தியர்கள் வெளிநாடுகளில் மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான தகைமைகளை முன்னரே பெற்றுக்கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு மருத்துவ சேவைகள் தொடர்பான பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

வெளிநாடுகளில் சிறந்த வாழ்க்கைச் சூழல், பொருளாதார வளங்கள் காணப்படுவதால் அவர்கள் அங்கு தொழில் வாய்ப்புகளைத் தேடுகின்றனர்.

இதுபோன்ற சூழ்நிலையில், நாட்டில் உள்ள வைத்தியர்களையும் மருத்துவ ஊழியர்களையும் பாதுகாப்பதோடு, நிலையான பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுகாதார சேவையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிவர்த்தி செய்ய, அர சாங்கம் ஒரு குறுகிய கால தீர்வினை காணவேண்டும்.

சுகாதார சேவை மோசமான நிலைக்குச் செல்வதை தடுப்பதற்குத் தேவையான மாற்று வழிகளை வரவு-செலவுத் திட்டம் அறிமுகப்படுத்தும் என நம்புகிறேன்-என்றார். (அ)

# குரங்குகளைப் பிடிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 14

தற்போது குரங்குகளை பிடிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக வேளாண்மை, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால் காந்தா தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது பிடிபட்ட குரங்குகளைக் கொண்டு சென்று விடுவிப்பதற்கு ஒரு தீவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இந்த ஆராய்ச்சித் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும், இது முழுமையாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவரணவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# காதலர் தினம் பெற்றோர்களே அவதானம்!

கொழும்பு, பெப். 14

உலகம் முழுவதும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி காதலர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்த தினத்தை வர்த்தகர்களும் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

அதன்படி, இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட வுள்ள காதலர் தினத்தில் பல்வேறு குற்றச் செயல்கள் குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமூக ஊடகங் களை தவறாக பயன்படுத்துதல், மோசடிகளில் ஈடுபடுதல், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடு பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# போதைப்பொருள் பாவித்துவிட்டு பஸ்களைச் செலுத்தும் சாரதிகள்!

## பயணிகள் உரிமைகள் பாதுகாப்புக் குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 14

பஸ் சாரதிகள் போதைப் பொருள் பாவனையில் வாகனம் செலுத்துவதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாக பயணிகள் உரிமைகள் பாதுகாப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்ட வீதி விபத்துகள் மற்றும் பயணிகளின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பயணிகள் உரிமைகள் பாதுகாப்புக் குழு செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதன் போது, பஸ் உரிமையாளர்கள் பேருந்து சாரதிகளின் சோர்வைப் போக்க போதைப் பொருட்களைக் கொடுப்பதாக பயணிகள் உரிமைகள் பாதுகாப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த சில வாரங்களாக நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் காரணமாக பலர் உயிரிழந்துள்ளனர்.

மிக நெருக்கமான சம்பவமாக கடந்த 10 ஆம் திகதி குருநாகல் பகுதியில் பதிவாகியுள்ளது. இவ்விபத்தின் விளைவாக 28 பேர் காயமடைந்ததுடன் 4 பேர் உயிரிழந்திருந்தனர்.

பஸ் நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்று மற்றொரு தனியார் பஸ்ஸ/டன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான விபத்துக்களை குறைப்பதற்காகவும் பயணிகள் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் பயணிகள் உரிமைகள் பாதுகாப்பு குழு இச் செய்தியாளர் சந்திப்பை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபரை பாதுகாக்கும் முயற்சியில் சட்ட அதிகாரிகள்!

கொழும்பு, பெப். 14

**சட்டமா அதிபரை பதவியில் இருந்து நீக்கும் எந்தவொரு முயற்சிக்கும் எதிராக வாதிடுவதற்கு தயங்கப்போவதில்லை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அண்மைக் காலமாக சட்டமா அதிபர் தொடர்பில் பரப்பப்படும் தவறான மற்றும் அவதூறான கருத்துக்கள் தொடர்பில் தமது சங்கம் ஆழ்ந்த கவலையடைவதாக சட்ட அதிகாரிகள் சங்கத்தின் பதில் செயலாளர் தஷ்ய கஜநாயக்க இது தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு வழக்கில் சந்தேகநபர்கள் மூவரை விடுதலை செய்வதற்கு கடந்த தினம் சட்டமா அதிபர் வழங்கிய பரிந்துரைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மரபுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உரிய சட்ட விடயங்களை கருத்திற்கொண்டு அதற்கான சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த தீர்மானத்தில் தொழிற்சங்கம் மிகுந்த நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் உயர் மரபுகளுக்கு அமைவாக தனது சுயாதீன தீர்ப்பை பிரயோகித்துள்ளதாகவும், சட்டமா அதிபரை பதவியில் இருந்து நீக்கும் எந்தவொரு முயற்சியையும் எதிர்க்கும் எனவும் சட்ட அதிகாரிகள் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ராஜகிரியவில் மீட்கப்பட்டது சட்டவிரோத சொகுசு வாகனம்!

கொழும்பு, பெப். 14

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் வைத்து சட்டவிரோதமாக அசெம்பிள் செய்யப்பட்ட எஸ்.யு.வி வாகனம் ஒன்று வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமான முறையில் அசெம்பிள் செய்யப்பட்ட வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனம் சட்டவிரோதமாக இலங்கைக்குப் பாகங்களாகக் கொண்டுவரப்பட்டதா அல்லது திருடப்பட்ட வாகன உதிரிபாகங்களைப் பொருத்துவதற்குப் பயன்படுத்தியதா என்ற சந்தேகத்தின் பேரில் வாகனம் கைப்பற்றப்பட்டது.

சந்தேகத்திற்குரிய வாகனத்தை ஓட்டிச் சென்ற இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

அவர் கடுவலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

# முகம் கழுவச்சென்றவரை இழுத்துச் சென்ற முதலை!

கொழும்பு, பெப். 14

முகம் கழுவச் சென்ற நபரை முதலை இழுத்து சென்ற சம்பவமொன்று களுத்துறையில் பதிவாகியுள்ளது. இந்த சம்பவம் களுத்துறை போதி விகாரைக்கு அருகிலுள்ள பாலத்தின் கீழ் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

பாலத்தின் கீழ் முகம் கழுவிக்கொண்டிருந்தபோது குறித்த நபரை முதலை ஒன்று திடீரென தாக்கி இழுத்துச் செல்வதைக் அவதானித்த நபரொருவர் களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, குறித்த இடத்தில் இருந்து பயணப் பை ஒன்றும், கதிர்காமம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபரின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையும், இரண்டு வங்கி வைப்பு புத்தகங்களும் கடவுச்சீட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் இலங்கை கடற்படையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், களுத்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நுரைச்சோலை மின் நிலையத்தை விரைவாக தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க ஏற்பாடு!

கொழும்பு, பெப். 14

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை விரைவாக மீண்டும் தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை ஒரு மின்பிறப்பாக்கியை மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதன் மூலம் தடையில்லாத மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, குறித்த மின்பிறப்பாக்கிகள் தேசிய மின் கட்டமைப்புடன் மீண்டும் இணைக்கப்படும் வரை நாட்டில் தினமும் மின் துண்டிப்பை அமுலாக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 44 நாள்களுக்குள் 5591 பேருக்கு டெங்கு!

கொழும்பு, பெப். 14

நாட்டின் 17 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பெரும்பாலானவர்கள் கொழும்பு, கம்பஹா, கண்டி, மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5591 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் நாட்டின் 74 வைத்தியசாலைகளில் 342 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# குளிர்பானத்தை குடித்த மகளும் தந்தையும் வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 14

பலாங்கொடை - கிரிதிகல பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் குளிர்பான போத்தல் ஒன்றைக் கொள்வனவு செய்து அதை அருந்திய பின்னர் திடீர் சுகவீனமடைந்த சிறுமி ஒருவர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த குளிர்பானத்தை குடித்த பின்னர் மயக்கம் மற்றும் வாந்தி காரணமாக 8 வயது சிறுமி நேற்று முன் தினம் மதியம் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுமியின் சுகயீனத்திற்கான காரணத்தை அறிவதற்காக, சிறுமியின் தந்தையும் குளிர்பானத்தில் இருந்து சிறிது குடித்திருந்தார். பின்னர் அவரும் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது சிறுமியும் அவரது தந்தையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# புற்றுநோயால் வருடாந்தம் 250 சிறுவர்கள் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 14

வருடாந்தம் 1200 சிறுவர்கள் புற்றுநோயுடன் அடையாளம் காணப்படுவதாக சுகாதார ப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர், நிணநீர் சுரப்பி புற்றுநோய், எலும்பு புற்றுநோய் மற்றும் மூளை புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தின் சமூக விசேட வைத்திய நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்தார்.

இவர்களில் வருடாந்தம் சுமார் 250 சிறார்கள் உயிரிழப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை நிறுத்தம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 14

கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கல்வி மறுசீரமைப்பில் 2018 இலிருந்து இடம்பெற்ற தலையீடுகள் தொடர்பில் ஆராய்ந்தோம். தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தினுள்ளும் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பான விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

கல்வி பாடவிதானத்தில் மாற்றத்தை கொண்டுவருவது மாத்திரம் கல்வி மறுசீரமைப்பாகிவிடாது.

அதனையும் தாண்டிய விருத்தி கல்வித்துறையினுள் ஏற்பட வேண்டியது அவசியமாகும். கல்வியின் ஊடாக அடைய எதிர்பார்க்கும் விடயத்தை அடைய வேண்டுமானால் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம்.

அதன் காரணமாகவே 2025 இல் நடைமுறைப் படுத்தப்படவிருந்த மறுசீரமைப்பு நடவடிக்கையை நிறுத்தியிருந்தோம்.

இவ்வருடத்தில் மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தினால் தோல்வி அடைய நேரிடும்.

ஆகவே தான் நாம் இப்போது குறித்த மறுசீரமைப்பை மேற்கொள்ள வில்லை. மாறாக நாம் இவ்வருடத்தை கல்வித்துறை மறுசீரமைப்பிற்கு தயாராகும் வருடமான மாற்றியமைக்கவுள்ளோம்.-என்றார். (அ)

# இலங்கை- அரபு இராச்சியம் இடையே ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, பெப். 14

பொருளாதார, முதலீட்டுத் தொடர்புகளைப் பலப்படுத்த ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உலக அரச உச்சி மாநாட்டையொட்டி அநுர குமார திசாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மேற்கொண்டிருந்த மூன்று நாள் விஜயத்துடன் இணைந்ததாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிதி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மொஹமட் பின் ஹாட் அல் ஹூசெதி மற்றும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த இருதரப்பு ஒப்பந்தம், உலக சந்தைகளில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், வெளிநாடுகளில் முதலீடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கும் சட்ட வரைவொன்றை வழங்கும்.

முதலீட்டாளர் உரிமைகளைப் பாதுகாக்கவும், பொருளாதார ஒத்துழைப்புக்களை மேம்படுத்தவும் விரிவான முதலீட்டு பாதுகாப்பு,

பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கான நெறிமுறை மற்றும் கொள்கை வரைவு தயாரிப்பாளர்கள் தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற் கான வசதிகளை வழங்குதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும்.

இந்த ஒப்பந்தம் உலக பொருளாதார கூட்டிணைவை வலுப்படுத்தும் அதேவேளை இலங்கைக்கான முதலீட்டு வாய்ப்புகளைத் தேடுவதற்கான வசதிகளையும் வழங்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் வர்த்தக மற்றும் வணிக வேலைத்திட்டங்களை வலுப்படுத்துவதுடன் வெளிப்படைத் தன்மையான மற்றும் நிலையான முதலீட்டுச் சூழலை உருவாக்கவும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் இந்த ஒப்பந்தம் புதிய முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும் அதனால் பொருளாதார முன்னேற்றத்துக்கும், புதிய வணிக வாய்ப்புக்களை உருவாக்கவும் வழிவகுக்கும்.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால தொடர்புகளை வலுப்படுத்தி நிலையான முதலீடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் நிதி தொடர்புகளை மேம்படுத்தவும் வழிவகுப்பதாக இது அமையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பிரச்னைகளுக்கும் அரசு குரங்குகள் மீது பழி

## ராஜித சேனாரத்ன சாடல்

கொழும்பு, பெப். 14

**நாட்டிலுள்ள அனைத்து பிரச்னைகளுக்கும் குரங்குகள் மீது பழிசுமத்தப்படுகிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அங்கு குரங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கலாம் எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த அரசாங்கத்தில் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்கள் காணப்பட்டன.தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீன விஜயத்தின்போது இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கலாம்.

இதன் பின்னணியில் தான் சகல பிரச்னைகளுக்கும் குரங்குகள் மீது பழிசுமத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

மின்சாரத்துக்கான கேள்வி மற்றும் விநியோகத்தில் காணப்படும் சிக்கலே இதற்கான காரணமாகும்.

நுரைச்சோலையில் மின் பிறப்பாக்கிகள் 3 செயலிழந்துள்ளமையால் இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் 900 மெகாவோல்ட் மின் உற்பத்தி தடைபட்டுள்ளது.அவ்வாறெனில் அரசாங்கம் முதலில் இந்த பிரச்சினைக்கு தீர்வினை வழங்க வேண்டும்.மின் சக்தி அமைச்சர் பொறியியலாளர் எனக் கூறுவது நகைச்சுவையாகவுள்ளது.இவ்வாறு சமநிலையற்ற தன்மை தொடர்பில் மின்சார சபை பொறியியலாளர்களால் முன்னரே அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரால் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப் படவில்லை. இவர்களுக்கு சிறந்த அரசியலில் ஈடுபட முடியும்.ஆனால் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

ஆட்சி நினைத்ததைப் போல அன்றி, மிகவும் கடினமாகவுள்ளதாக ஜே.வி.பி.யினர் குறிப்பிடுகின் றனர்-என்றார். (அ)

# வெப்ப காலநிலை ஏப்ரல் நடுப்பகுதிவரை தொடரும்

கொழும்பு, பெப். 14

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது

அத்துடன், தற்போது அதிகாலை வேளையில் நிலவும் குளிரான காலநிலையும் தொடரக்கூடுமென திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சில பகுதிகளில் இடைக்கிடையே சிறியளவில் மழை வீழ்ச்சி பதிவாகினாலும், வெப்பமான காலநிலை தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

மழை பெய்வதற்கு ஏற்ற அளவிலான திறன் கொண்ட மேகங்களின் உருவாக்கம் குறைவாகக் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 14

2025 உலக உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று நாடு திரும்பினார்.

அந்நாட்டு ஜனாதிபதி முகமது பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில்,

ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டி ருந்தார்.

2025 உலக அரசாங்க உச்சி மாநாட்டில் நேற்று முன் தினம் ஜனாதிபதி உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள பல துறைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இரு தரப்பு கலந்துரையாடல் களை இதன்போது நடத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய கண் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளருக்கு மிரட்டல்!

கொழும்பு, பெப். 14

தேசிய கண் வைத்தியசாலையின் உணவுகள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்த அந்த வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஜயரூவன் பண்டாரவுக்கு சமையலறைப் பணியாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விற்பனை தொடர்பில் சமையலறைப் பணியாளர்கள் இருவரை அழைத்து அவர் விசாரணை நடத்திய நிலையில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவுகள் வெளியில் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் வைத்தியசாலையின் கட்டுப்பாட்டுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்தி ருந்தது.

இந்த விடயம் தொடர் பில் விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சுக்கு 3 மாதங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை விசாரணை நடத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவ்வாறு உணவுகள் வைத்தியசாலைக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படும் சம்பவங்கள் தொடர்பான சி.சி.ரி.வி காணொளி காட்சிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கருத்துரைத்த வைத்தியர் ஜயரூவன் பண்டார, இது தொடர்பில் சுகாதார அமைச்சினூடாக விசாரணைகள் இடம்பெறுமென எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார். (அ)

# குவைத்துடன் வர்த்தக உறவை வலுப்படுத்த இலங்கை திட்டம்!

கொழும்பு, பெப். 14

2025 உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

தற்போது இலங்கையின் அரசியல் மற்றும் நிதி ஸ்திரத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறைக்கான சாத்தியங்கள் விரிவடைந்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார இதன்போது சுட்டிக் காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் சந்தையை பன்முகப்படுத்துவது குறித்து இரு தரப்பும் கவனம் செலுத்தியதுடன், அதற்கான புதிய உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியை பெற்றுக் கொள்வதற்கு குவைத் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபாவுக்கு நன்றி தெரிவித்தார்.

குவைத்தில் சுமார் 155,000 இலங்கைப் பணியாளர்கள் இருப்பதாகவும், அவர்களிடமிருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் வருமானமாக கிடைப்பதாகவும்,

இது இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பலமாக இருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

# நாடு திரும்பிய பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினர் கைது!

கொழும்பு, பெப். 14

பதில் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான உயர்மட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து, பிரபல பாதாள உலக நபரான மண்டலகல பொம்புகலகே சுமித் பிரியந்த இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளியான பிரியந்த, பல தீவிரமான குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்தவர்.

குறிப்பாக குருவிட்ட பகுதியில் 5 மில்லியன் ரூபாயை மிரட்டி பெற்றமை, போதைப் பொருள் கடத்தல் மற்றும் கைக்குண்டுகளை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக அவர் தேடப்பட்டு வந்தார்.

சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளும்போது, அவர் நாட்டை விட்டு வெளியேறி, நீதித்துறை செயல்முறையைத் தவிர்த்து, சட்டவிரோதமாக இந்தியாவுக்கு குடிபெயர்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விரிவான ஒருங்கிணைப்பைத் தொடர்ந்து, பதில் பொலிஸ் மா அதிபரின் நேரடித் தலையீட்டின் மூலம், இலங்கைப் பொலிஸார் வெற்றிகரமாக அவரை நாடு கடத்தியுள்ளனர்.

2025 பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி இரவு பிரியந்த விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளார்.சந்தேக நபரை குற்றப் புல னாய்வுப் பிரிவினர் (சிஐடி) கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மதுபானத்துடன் சீன நாட்டவர் கைது!

கொழும்பு, பெப். 14

வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய பொலிஸாரும் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளும் இணைந்து நடத்திய சோதனையில் சட்டவிரோத மதுபானம் தயாரித்து வந்த சீன நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வெல்லம்பிட்டிய, பிராண்டியாவத்த பகுதியில் வாடகை வீட்டில் தங்கியிருந்த சீனப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த சீன நாட்டவரிடமிருந்து 318,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் 67,500 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான சீன நாட்டவர் தாமரை கோபுர திட்டத்தில் பொறியாளராகப் பணியாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# குரங்குகளுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யும் திட்டம் தோல்வியில் முடிவு

கொழும்பு, பெப். 14

குரங்குகளின் இனப்பெருக்கத்தை குறைத்து அவற்றால் விளைவிக்கப்படும் சேதங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் குரங்குகளுக்கான குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம் முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் சில காரணங்களால் அம் முயற்சி தோல்வியடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பயிர்ச்செய்கைகளுக்கு குரங்குகள் விளைவிக்கும் பாதிப்பை கட்டுப்படுத்த குரங்கு இனப் பெருக்கத்தைக் குறைக்கும் நோக்கில் குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம் பரீட்சார்த்தமாக செயல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைத் தொடர்ந்து, குரங்குகளின் இனப்பெருக்கம் குறையும் என்ற எதிர்பார்ப்பில், மாத்தளை மாவட்டத்தின் ஹரஸ்கம பிரதேசத்தில் குரங்குகளுக்கான இந்த பரீட்சார்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், குரங்குகளுக்கான குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை மேற்கொள்வதற்கு தேவையான மிருக வைத்தியர்களுக்கு தட்டுப்பாடு, உயர்வான சிகிச்சை செலவு மற்றும் கிரிதல மிருக வைத்திய சிகிச்சை நிலையத்துக்கு குரங்குகளை போக்குவரத்து செய்வதில் ஏற்படும் அதிக செலவு போன்ற காரணிகளினால் இந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதிக்கப்பட்ட நிலையில்,

இணைப்புக் குழுவின் தலைவர் மற்றும் பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்கவுக்கு இந்த சூழ்நிலை பற்றிய அதிகாரபூர்வ தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு மட்டும் 12 மில்லியன் ரூபா செலவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50, 000 இளைஞர் - யுவதிகள் வேலைவாய்ப்பின்றி அவதி

## மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப்.14

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்றி 50, 000 இளைஞர் - யுவதிகள் உள்ளனர். இது மாவட்டத்தின் சனத்தொகையில் 7 சதவீதம் என்று மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி சிறீகாந்த் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ருமேனியாவுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் இளைஞர் - யுவதிகளுக்கான நேர்முகத் தெரிவு நேற்று முன்தினம் மட்டக்களப்பு கிரீன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் - யுவதிகளுக்கு இவ்வாறு வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்காக நம்பிக்கையான நிறுவனங்கள் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு அதிகமான நிறுவனங்கள் மாவட்டத்துக்கு வருகை தந்து நம்பகத்தன்மையான முறையில் இளைஞர் - யுவதிகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அனுப்புகின்றபோது எமது மாவட்டத்தில் நிலவுகின்ற வேலை வாய்ப்பு பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்"- என்றார். (எ)

# எந்நாட்டவர்க்கும் இறைவன் நூல் அறிமுக விழா நாளை

திருகோணமலை, பெப்.14

"அன்பின் பாதை - எண்ணம் போல் வாழ்க்கை" கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி எழுதிய திருவாதவூரர் மாணிக்கவாசகர்தம் "எந்நாட்டவர்க்கும் இறைவன்"

நூல் அறிமுக விழா நாளை திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

"அன்பின் பாதை - எண்ணம் போல் வாழ்க்கை" கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் கிழக்கு மாகாணம் ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை சிறீ பத்திர காளியம்பாள் தேவஸ்தான குருக்கள்பிரம்ம சிறீ சோ. ரவிச்சந்திர குருக்கள் மற்றும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயேல் இம்மானுவேல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

# திருமலையில் திடீரென தீப்பற்றி எரிந்த குடிசை



திருகோணமலை, பெப்.14

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புடவைக்கட்டு கிராமத்தில் குடிசை ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்த குடிசையில் சமைத்துக் கொண்டிருந்த போது, திடீரென கூரையில் தீப்பிடித்தது.

இதனால், அங்கிருந்த உடைமைகள் முற்றாக தீக்கிரையாகின. ஆனால், உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணை களை குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# காலாவதியான பொருட்கள் கைப்பற்றல் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

சாய்ந்தமருது, பெப்.14

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி மூலமான முறைப்பாட்டினை தொடர்ந்து அதன் உண்மைத் தன்மையை அறிய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பல சரக்கு வியாபார நிலையத்தில் கடந்த 11 ஆம் திகதி திடீர் பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. வாஸீத் அஹமட் உணவு மற்றும் மருந்து பரிசோதகர் எஸ். ஜீவராஜாவால் பலசரக்கு வியாபார நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டு,

மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது தமது கடமையும், பொறுப்பு மாகும் என்ற அடிப்படையில் அந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்களும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் 0753333453, 0776702703 , 077 375 1749 எனும் இலக்கங்களூடாக அறியத்தருமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

# தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் விழுந்து பலி!

கல்முனை, பெப்.14

தேங்காய் பறிக்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் தவறி விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.நிந்தவூர்-8 அல்மினன் வீதியைச் சேர்ந்த 25 வயது முகமட் ஆசாத் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறிக்கும் போது கால் வழுக்கி சுவரில் விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ- 01)

# கட்சிகளை ஆணைக்குழு சந்திக்க வேண்டும்

கல்முனை, பெப். 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுக்கான திகதி அறிவிப்பதற்கு முன்பு தேர்தல்கள் ஆணைக்குழுவானது சகல அரசியல் கட்சி செயலாளர்களையும் சந்திக்க வேண்டும் என்று சில முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளதாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர தெரிவித்தார்.

இது தொடர்பான மகஜர் ஒன்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்கவிடம் நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம். பி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர எம். பி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் எம்.பி, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம். பி உள்ளிட்டோர் தேர்தல் செயலகத்துக்கு சென்று இந்த மகஜரை கையளித்துள்ளனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட தேர்தல்கள் ஆணையாளர், குறித்த கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார் என்று நிசாம் காரியப்பர் தெரிவித்தார். (எ)

# கல்முனை நீதிமன்றிலிருந்து சந்தேக நபர் தப்பியோட்டம்

கல்முனை, பெப்.14

நீதிமன்றில் வழக்கு நடைபெற்ற வேளை தப்பிச் சென்ற சந்தேக நபரை தேடும் பணியில் கல்முனை தலைமையக பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை குறித்த சந்தேக நபர் அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக அழைத்து வரப்பட்டு விசாரணையின் பின்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும், குறித்த சந்தேக நபருக்கு பிணையாளி கள் இன்மையால் நீதிமன்ற உள்ளக வளாகத்தில் உள்ள சிறைக் கூடத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த நிலையில், குறித்த நபர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பி நீதிமன்ற சுவர் மேல் குதித்து தப்பியோடியதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டு தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

# பல ஏக்கர் வயல்நிலங்களை சேதப்படுத்திய யானைகள்

மட்டக்களப்பு, பெப்.14

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று - பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி ஆனைகட்டியவெளி வயல் நிலங்களுக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள் பல ஏக்கர் வயல்நிலங்களை சேதப்படுத்தியுள்ளன.

தற்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகிறது. மழை வெள்ளத்தில் அழிந்துபோய் மீதமாகவுள்ள நெல்லை அறுவடை செய்வதற்கு முன்னமே காட்டு யானைகள் துவம்சம் செய்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.காட்டு யானைகளிடமிருந்து தமது நெற்பயிரைப் பாதுகாக்க இரவு முழுவதும் காவல் காக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது வயல் பகுதியை அண்மித்துள்ள சிறிய சிறிய பற்றைக் காடுகளிலும், வாய்க்கால் ஓரங்களிலும் இவ்வாறு காட்டுயானைகள் தங்கி நின்று இரவு வேளைகளில் வயல் நிலங்களுக்குள் புகுந்து துவம்சம் செய்து வருவதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவாங்கரைப் பிரதேசத்தில் மிக நிண்ட காலமாக காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதுடன், யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதைத் தடுக்க பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



அம்பாறை, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் முதல் நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதலாமிடம் பெற்ற பிர்தௌஸி இல்ல வீரர் ரி. றிஸ்கி அகமட்டுக்கு துவிச்சக்கரவண்டி பரிசாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகள் நாளைக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும்

## இல்லையேல் மீண்டும் தாக்குதலை தொடங்குவோம் ஹமாஸ் அமைப்புக்கு இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை

டெல்அவிவ், பெப்.14

**பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு நாளை சனிக்கிழமைக்குள் விடுதலை செய்யவில்லையென்றால் மீண்டும் தாக்குதலை தொடங்குவோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஓராண்டை கடந்து நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டது. பணயக் கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

போர் நிறுத்தத்தின் முதற் கட்டமாக 6 வாரங்களில் (42 நாட்கள்) 33 பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. இந்த 33 பணயக் கைதிகளுக்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனியர்கள் 1,904 பேரை இஸ்ரேல் விடுதலை செய்ய இணக்கம் தெரிவித்தது. பணயக் கைதிகள் 33 பேரில் சிலர் உயிரிழந்ததாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

6 வார போர் நிறுத்தம் அமுலில் உள்ள நிலையில் இதுவரை இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 21 பேரை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. இதற்கு ஈடாக இதுவரை 730 பலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது. காஸாவில் இன்னும் 76 இஸ்ரேலியர்கள் பணயக் கைதிகளாக உள்ளதாகவும், இதில் 36 பேர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாளை சனிக்கிழமை அடுத்தகட்டமாக மேலும் 3 இஸ்ரேலிய பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறிவிட்டதாக குற்றஞ்சாட்டிய ஹமாஸ் நாளை சனிக்கிழமை பணயக் கைதிகளை விடுதலை செய்யமாட்டோம் என தெரிவித்துள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை அனைத்து பணயக் கைதிகளையும் ஹமாஸ் விடுதலை செய்யவில்லை என்றால் காஸாவில் நரகம் வெடிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் பாதுகாப்பு சபைக் கூட்டம் பிரதமர் நெதன்யாகு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத் தில் முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டதாக தகவல் வெளியானது.

இந்த நிலையில், பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு நாளை சனிக்கிழமைக்குள் விடுதலை செய்யவில்லையென்றால் காஸாவில் மீண்டும் தாக்குதலை தொடங்குவோம் என்று இஸ்ரேல் பிரதமர்



நெதன்யாகு மிரட்டல் விடுத்துள்ளார். இது தொடர்பில் நெதன்யாகு கூறுகையில், "ஹமாஸ் அமைப்பு நாளை சனிக்கிழமை மேலும் சில பணயக் கைதிகளை விடுதலை செய்யவில்லையென்றால் நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவோம். காஸாவில் மீண்டும் தாக்குதலை தொடங்க தயாராகும்படி படையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்"-என்றார். (எ)

# புதிய இந்தியத் தூதரகம் பிரான்ஸில் திறந்து வைப்பு



பாரிஸ், பெப்.14

பிரான்ஸில் புதிதாக அமைக்கப்பட்ட இந்தியத் தூதரகத்தை அந்த நாட்டின் ஜனாதிபதியுடன் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

அரசு முறை பயணமாக பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றுள்ளார். பாரிஸில் நேற்று முன்தினம் தொடங்கிய சர்வதேச செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொண்டார். பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் உட்பட பல வேறு நாட்டுத் தலைவர்கள் பங்கேற்ற இம்மாநாட்டில் மோடி விசேட உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து, பிரான்ஸின் மெர்சிலி நகருக்கு மோடி சென்றார். அங்கு புதிதாக கட்டப்பட்டுள்ள இந்தியத் தூதரகத்தை பிரான்ஸ் ஜனாதிபதியுடன் சேர்ந்து பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

முன்னதாக, மெர்சிலி நகரில் உள்ள கல்லறை தோட்டத்துக்கு சென்ற பிரதமர் மோடி, உலகப்போரில் உயிரிழந்த இந்தியர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். இதனைத் தொடர்ந்து இரு தலைவர்களும், மெர்சிலி நகரில் வசித்துவரும் இந்திய வம்சாவளியினரிடம் கலந்துரையாடினர். (எ)

# பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும்

## ஹமாஸிடம் ஐ. நா. கோரிக்கை

ஜெனிவா, பெப்.14

ஹமாஸ் அமைப்பினர் நாளை சனிக்கிழமை பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று ஐ. நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரெஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஸாவில் மீண்டும் ஒரு பெரிய சோகத்துக்கு வழிவகுக்கும் விரோதப் போக்கை நாம் தவிர்க்க வேண்டும்.

எனவே, ஹமாஸ் அமைப்பினர் நாளை சனிக்கிழமை இஸ்ரேல் பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும். இரு தரப்பினரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தங்கள் உறுதி



மொழிகளை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும். அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.(எ)

# பங்களாதேஷில் வன்முறையால் 1, 400 பேர் பலி!

ஜெனிவா, பெப்.14

பங்களாதேஷில் வன்முறையால் 1,400இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்று ஐ. நா. அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாணவர்களின் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதையடுத்து அந்த நாட்டின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதற்கிடையே, மாணவர்கள் நடத்திய போராட்டங்களின்போது நிகழ்ந்த வெவ்வேறு வன்முறைச் சம்பவங்களில், அதிலும் குறிப்பாக ஜூலை 15 முதல் ஓகஸ்ட் 5 வரையிலான மூன்றே வாரங்களில் மட்டும் உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் 1,400-ஐ தாண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷில் படைகள் மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாகவும், போராட்டக்காரர்களை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக போராட்டங்களின்போது மனித உரிமை மீறல் குற்றங்கள் அதிகளவில் நடந்ததாகவும், இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் ஐ. நா. தெரிவித்துள்ளது. அங்கு ஆட்சி மாறியிருந்தாலும் நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை எனவும் ஐ. நா. சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பும் மதிக்க வேண்டும்

காஸா, பெப்.14


போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இரு தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில் கடந்த 10 ஆம் திகதி செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "காஸாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் பணயக் கைதிகள் அனைவரும் நாளை சனிக்கிழமை மதியத்துக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும். அப்படி அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்து விடுவேன்"- என்றார்.

ட்ரம்ப்பின் இந்த மிரட்டலுக்கு ஹமாஸ் அமைப்பு பதிலடி கொடுத்துள்ளது. அந்த அமைப்பின் மூத்த செய்தித் தொடர்பாளர் சமி அபு ஜூரி கூறுகையில், "பணயக் கைதிகள் விவகாரத்தில் மிரட்டல் விடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

ட்ரம்பின் பேச்சுக்கள், போர் முடிவுக்கு வருவதற்கான பேச்சுக்களை கடினமாக்குவதை மட்டுமே செய்துள்ளது. இந்த விவகாரத்தில், மிரட்டலுக்கான மொழியில் அர்த்தம் இல்லை. அது நிலைமையை இன்னும் சிக்கலாக்கும். போர் நிறுத்த ஒப்பந்தம் என ஒன்று உள்ளது. இதற்கு இரு தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும். இதுவே, கைதிகளை திரும்பப் பெறுவதற்கான ஒரே வழியாகும்"- என்றார். (எ)

# அமெரிக்க புலனாய்வுத்துறை தலைவருடன் மோடி சந்திப்பு



வாஷிங்டன், பெப்.14

அமெரிக்க புலனாய்வுத் துறை தலைவர் துளசி கப்பார்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து கலந்துரையாடினார்.

அமெரிக்காவுக்கு இரண்டு நாள் அரசு முறைப்பயணமாக சென்றுள்ள பிரதமர் மோடி நேற்று வியாழக்கிழமை காலை வாஷிங்டனில் அமெரிக்க புலனாய்வுத்துறை தலைவர் துளசியுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இது தொடர்பில் மோடி தனது எக்ஸ் பக்கத்தில், "இந்திய - அமெரிக்க நட்புறவு குறித்து ஆலோசித்தேன். இந்தியாவுடனான நட்புறவைப் பேணுவதில் துளசி எப்போதுமே உறுதியாக இருப்பவர். அவர் ட்ரம்ப் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதற்காக வாழ்த்தும் தெரிவித்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி

கொழும்பு, பெப்.14


அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. அடுத்து இவ்விரு அணிகள் இடையே 2 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி கொழும்பில் உள்ள பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 46 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 214 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக சரித் அசலங்க 127 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் சீன் அப்போட் 3 விக்கெட்களும், ஸ்பென்சர் ஜோன்சன், ஆரோன் ஹார்டி, நாதன் எல்லீஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதையடுத்து 215 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியினர் இலங்கையின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். இதில் ஜேக் பிரேசர் மெக்குர்க் 2, கூப்பர் கன்னோலி 3, ஸ்டீவ் ஸ்மித் 12, மார்னஸ் லபுஸ்சாக்னே 15, மத்தியூ ஷார்ட் ஓட்டம் இன்றியும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஜோடி சேர்ந்த அலெக்ஸ் ஹெரி - ஆரோன் ஹார்டி இணை சிறிது நேரம் நிலைத்து நின்று ஆடியது. இந்த இணையை அணித் தலைவர் சரித் அசலங்க பிரித்தார். இதில் அலெக்ஸ் ஹெரி 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்



கிய வீரர்கள் அடுத்தடுத்து தங்களது விக்கெட்களை இழந்தனர்.

இதில் சீன் அப்போட் 20, ஆரோன் ஹார்டி 32, நாதன் எல்லீஸ் மற்றும் ஸ்பென்சர் ஜான்சன் ஆகியோர் ஓட்டம் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் அவுஸ்திரேலியா 33. 5 ஓவர்களில் சகல விக்கெட்க ளையும் இழந்து 165 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது.

இலங்கை தரப்பில் அபாரமாக பந்துவீசிய மகேஷ் தீக்சனா 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1 - 0 என இலங்கை முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி இன்று 14 ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)

# ஒருநாள் தொடரும் இந்திய அணி வசம்

## இங்கிலாந்து பரிதாபம்

அகமதாபாத், பெப்.14

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை 3 - 0 என்ற கணக்கில் இந்திய அணி முழுமையாக கைப்பற்றியது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று விளையாடியது. இதில் நாக்பூர் மற்றும் கட்டாக்கில் நடந்த முதல் இரு ஆட்டங்களில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.

இந்த நிலையில் இந்தியா - இங்கிலாந்து இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 356 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக சுப்மன் கில் 112 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஆதில் ரஷித் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 357 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது.

இங்கிலாந்தின் தொடக்க வீரர்களாக பென் டக்கட் மற்றும் பில் சால்ட் ஆகியோர் களமிறங்க்னர். இருவரும் அதிரடியாக ஆடினர். முதல் விக்கெட்டுக்கு 60 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இந்த இணை பிரிந்தது. டக்கட் 34 ஓட்டங்களிலும், பில் சால்ட் 23 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து களமிறங்கிய ரொம் பான்டன் 38, ஜோ ரூட் 24, ஹாரி புரூக் 19, ஜோஸ் பட்லர் 6, லியாம் லிவிங்ஸ்டன் 9 ஓட்டங்களிலும் அடுத்து வந்த ஆதில் ரஷித் ஓட்டம் எடுக்காமலும், மார்க் வுட் 9 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இங்கிலாந்து அணி 34. 2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 214 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக கஸ் அட்கின்சன் மற்றும் ரொம் பான்டன் தலா 38 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்தியா தரப்பில் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா, அக்சர் பட்டேல், ஹர்த்திக் பாண்டியா ஆகியோர் தலா 2 விக்கெட்களும், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்திய அணி 3 - 0 என முழுமையாக கைப்பற்றியது. அத்தோடு, இந்த இரு அணிகள் இடையே நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரை இந்திய அணி 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (எ)



# ஆர்.சி.பியின் தலைவராக ரஜத் பட்டிதார் நியமனம்

பெங்களூரு, பெப்.14

அடுத்த மாதம் தொடங்கவுள்ள ஐ. பி. எல். 2025ஆம் ஆண்டுக்கான சீசனில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர். சி. பி.) அணியின் தலைவராக ரஜத் பட்டிதார் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஐ. பி. எல். சீசனுக்கு தங்கள் அணியின் புதிய தலைவர் யார் என்பதை அறிவிக்கும் விதமாக நேற்று பிரத்தியேக நிகழ்வை ஏற்பாடு செய்தது ஆர். சி. பி. அணி. இதில் இந்திய வீரர் ரஜத் பட்டிதார் அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டார். கடந்த 2021 சீசன் முதல் அவர் ஆர். சி. பி. அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த சீசனில் அவரை ஆர். சி. பி. அணி, இலங்கை மதிப்பில் சுமார் 35 கோடி ரூபாய்க்கு தக்கவைத்தது.

ஐ. பி. எல். போட்டியில் ஆர். சி. பி. அணிக்காக 24 இன்னிங்ஸில் விளையாடியுள்ள ரஜத் பட்டிதார் 799 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்சமாக ஒரே இன்னிங்ஸில் 112 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

ராகுல் ட்ராவிட், கெவின் பீற்றர்சன், அனில் கும்ப்ளே, டானியல் விக்ரரி, விராட் கோலி, ஷேன் வாட்சன், பாப் டூப்ளசி ஆகியோர் ஆர். சி. பி. அணியை இதுவரை வழி நடத்தியுள்ளனர். இந்த நிலையில் ரஜத் பட்டிதார் அந்த பொறுப்பை கவனிக்கவுள்ளார். (எ)

# ஒருநாள் போட்டியில் ஓர் ஆபூர்வ நிகழ்வு

கொழும்பு, பெப்.14

ஒருநாள் கிரிகெட் போட்டி வரலாற்றில் இரண்டாவது முறையாக ஓர் ஆபூர்வ சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் ஒரே நாளில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் வெற்றிபெற்றுள்ளன. இதற்கு முன்னர் 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் போது மார்ச் 6ஆம் திகதி இந்த 3 அணிகளும் வெற்றிபெற்றன.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதேபோன்று, இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்தியா 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாகிஸ்தானின் கராச்சியில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் தென்னாபிரிக்க அணியை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இதன்படி, ஒரே நாளில் ஆசிய கண்டத்தை சேர்ந்த 3 நாடுகள் வெற்றிபெற்றன.

முன்னதாக கடந்த 1996 ஆம் ஆண்டு இலங்கை, கென்யாவை 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான், இங்கிலாந்தை 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தியா, சிம்பாவேயை 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. (எ)

# ஷோஹேலி அக்தருக்கு 5 ஆண்டு தடை விதிப்பு

டுபாய், பெப்.14

சூதாட்ட புகாரில் சிக்கிய பங்களாதேஷ் கிரிக்கெட் வீராங்கனை ஷோஹேலி அக்தருக்கு 5 ஆண்டுகள் தடை விதித்து ஐ. சி. சி. அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

சுழற்பந்து வீராங்கனையான ஷோஹேலி அக்தர் பங்களாதேஷ் அணிக்காக 2 ஒருநாள் மற்றும் 13 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவர் தனது தோழி மற்றும் சக கிரிக்கெட் வீராங்கனை ஒருவரை தொடர்பு கொண்டு உரையாடிய போது, உலகக் கிண்ண போட்டியில் குறிப்பிட்ட ஆட்டத்தில்

"ஹிட்விக்கெட்" முறையில் ஆட்டம் இழந்தால் பெரிய தொகை தருவதாக அந்த வீராங்கனைக்கு ஆசை காட்டினார். அதை ஏற்க மறுத்த அந்த வீராங்கனை உடனடியாக ஐ. சி. சியின் ஊழல் தடுப்பு பிரிவுக்கு தகவல் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து விசாரணை நடத்திய ஐ. சி. சி. ஷோஹேலி அக்தர் மீது 5 பிரிவுகளில் குற்றச்சாட்டை பதிவு செய்து விசாரித்தது. இதன் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் தடை விதித்து நேற்று முன்தினம் உத்தர விட்டது. (எ)

# ஆறு விக்கெட்களால் பாகிஸ்தான் வெற்றி


கராச்சி, பெப்.14

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் பங்கேற்றுள்ள முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

இதில் நியூசிலாந்து தனது முதல் 2 ஆட்டங்களில் முறையே பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்காவை வீழ்த்தி முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறிவிட்டது. இந்த நிலையில், இறுதிப்போட்டிக்கு முன்னேறும் 2ஆவது அணி எது என்பதைத் தீர்மானிக்கும் கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க



அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 352 ஓட்டங்கள் குவித்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக ஷஹின் அப்ரிடி 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 353 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசு கட்சி...

முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே வழக்கு இவ்வாறு தள்ளி வைக்கப்பட்டது.

வழக்கை இணக்கமாக முடிவுறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவே நேற்று வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், வழக்கின் எதிராளிகளான பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், ச. குகதாசன் மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் வழக்கை முடிவுறுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து நேற்றைய விசாரணையில் கடும் விவாதங்கள் இடம்பெற்றன.

இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கட்சியின் மத்திய குழுவில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு, அது பற்றித் தாம் ஒரு எதிராளி என்ற முறையில் நீதிமன்றத்துக்கு விவரமாக விடயங்களைச் சமர்ப்பித்திருக்கையில், மேற்படி மூன்று எதிராளிகளும் கட்சிக்குத் தெரியாமல் - கட்சியை இருட்டில் வைத்துக்கொண்டு - தம்பாட்டில் ஒரு திட்டத்தை, அதுவும் முன்னைய இணக்க ஏற்பாடுகளுக்கு மாறாக முன்வைத்து, இணக்கத்துக்கான வாய்ப்பை வேண்டுமென்றே குழப்பி அடிக்க முயன்றுள்ளனர் என்று எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சுமந்திரன் தமது தரப்பில் தாமே முன்னிலையானார். கட்சியின் செயலாளர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் மற்றும் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி சயந்தன் முன்னிலையானார்.

கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் இரத்தினவடிவில் சார்பிலும் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையானார்.

சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம், இரத்தினவடிவேல் ஆகிய எதிராளிகள் கட்சியின் மத்திய குழுத் தீர்மானபடி 156 உறுப்பினர்களுடன் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான இணக்கத் திட்டத்துக்குத் தாங்கள் சம்மதிக்கின்றார்கள் எனத் தெரிவித்தனர்.

அதேசமயம் சிறீதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோர் 324 உறுப்பினர்களுடன் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டும் திட்டத்தை வலியுறுத்தினர்.

இதையே ஆரம்பத்தில் எதிராளியான சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்று அவர்கள் மூவர் சார்பிலும் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார்.

வழக்கின் எதிராளிகளுக்கு இடையே கருத்து முரண்பாடு இருப்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டிய வழக்காளி தரப்பு சட்டத்தரணி, இக்காரணத்தால் இணக்கமான தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அருகி உள்ளன என்றும், வழக்கு விசாரணை நடத்தியே முடிவு காணவேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். இச்சமயத்தில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

வழக்கின் எதிராளிகளில் ஒருவரான கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அப்பதவியிலும் இல்லை, அவர் உயிரோடும் இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. அதனால், அந்த இடத்துக்குப் பதில் தலைவரின் பெயரை வழக்கில் எதிராளியாகச் சேர்ப்பதா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காக வழக்கு ஜூன் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் கட்சியின் பதில் தலைவர் எனக் கருதப்படுபவர் வழக்காளியாகச் சேர்க்கப்படவேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்தது.

அந்த விடயம் தீர்மானிக்கப்பட்ட பின்னரே வழக்கை விசாரிப்பது குறித்த முடிவை நீதிமன்றம் எடுக்கும் என்றும் கூறப்படுகின்றது.அதனால் இந்த வழக்கு விசாரணைக்கு வர நீண்ட காலம் செல்லும் என்று சட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன.

(அ)

## உள்ளூராட்சி...

நாள் வேட்புமனுக்களை திரும்பப் பெற தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கும். அதன்படி குறைந்த நாட்களுக்குள் தேர்தல் அறிவிக்கப்பட்டால் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும்.

ஆனால் அன்றைய தினம் தேர்தலை நடத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக 340 வகையான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட வேண்டியுள்ளதுடன், அதற்கு குறைந்த பட்ச கால அவகாசம் போதுமானதாக காணப்படாது.

அத்துடன் சிங்கள, தமிழ் புத்தாண்டு காரணமாகவும் குறித்த திகதியில் தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுகிறது.

இந்நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு, ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை உள்ளூராட்சி தேர்தலை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## தையிட்டி...

காணப்படும் குழப்பங்களுக்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இராணுவம் தற்போது அந்த விகாரையை நிர்வகித்துவந்தாலும் அரசாங்கம் பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்யவுள்ளதாகவும் பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் இராணுவமே தற்போது விகாரையை நிர்வகிக்கின்றது எனவும், தற்போது அங்கு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றன எனவும், பௌத்த மதகுரு ஒருவர் அங்கு தங்கியுள்ளார் எனவும், பாதுகாப்பு அமைச்சு தன்னால் அதனை தொடர்ந்து நிர்வகிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்யவேண்டுமென பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது எனவும், இந்த பெயரில் விகாரையொன்று ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், ஆனால் அங்கு நிலம் மட்டுமே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இராணுவத்தினரும் கடற்படையினரும் இரண்டு பௌத்த ஆலயங்களை நிர்வகிக்கின்றனர் எனவும்,

இது தமிழ் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் இராணுவத்தினால் அதனை நிர்வகிக்க முடியாவிட்டால் அதற்கு தீர்வை காண்பதற்கு நாமே நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

## சட்டமா...

என்றும், எனவே அவர்களை விடுவிக்க முடியும் என்றும் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு எழுத்து மூலமாக தெரிவித்திருந்தார்.

அவர்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்ட முன்னாள் இராணுவ வீரர் பிரேம் ஆனந்த உதலாகம, கல்கிஸ்ஸ பொலிஸ் குற்றப்பிரிவின் அப்போதைய பொறுப்பதிகாரி திஸ்ஸ சிறி சுகதபால மற்றும் முன்னாள் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன நாணாயக்கார ஆகியோர் அடங்குவர்.

கடந்த சில நாட்களாகச் சட்டமா அதிபரின் அந்தக் கடிதம் தொடர்பாக பல்வேறு விவாதங்கள் எழுந்தன.

அதனால் புதிய சாட்சியங்களை வெளிப்படுத்துவதன் அடிப்படையில் குற்றவியல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதைப் பரிசீலிப்பதற்கு எந்தவித தடையும் இல்லை எனச் சட்டமா அதிபர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (அ)

## சென்னை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, இண்டிகோ விமான நிறுவனத்தின் ஊடாக சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே வாரத்தில் ஐந்து நாட்களுக்கு ஒரு விமானத்தை இயக்குகிறது.

இந்தநிலையில், எதிர்காலத்தில் மேலும் இரண்டு நாட்கள் கூடுதலாக ஒரு விமானத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## உள்ளூராட்சி சபை...

தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர-

13 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இணைந்து கையெழுத்திட்டு தேர்தல் ஆணையத்துக்கு ஒரு கடிதத்தை சமர்ப்பித்துள்ளோம். சில விடங்களை நாம் இதில் உள்ளடக்கியுள்ளோம்.

எதிர்வரும் 18 ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் வரை வரவு- செலவுத்திட்ட விவாதம் இடம்பெறவுள்ளது. இத்தகைய பின்னணியில் தேர்தல் இடம்பெற்றால் நாம் எதிர்க்கட்சிகளாக நிறைய வேலைகளைச் செய்யவேண்டியிருக்கும்.

செலவு செய்து தேர்தலை நடத்துவதால் நெருக்கடி ஏற்படும். ஆகவே இது தொடர்பில் நாம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தினோம்

வரவு - செலவு திட்டத்தை தொடர்ந்து தேர்தலை நடத்துமாறு நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம். கடந்த தேர்தலில் நாங்கள் 1.5 கோடி ரூபாய்க்கு மேல் கட்டுப்பணம் செலுத்தியுள்ளோம். அந்த பணத்தை திரும்பப் பெற்ற பிறகுதான், அடுத்த தேர்தலில் பணத்தை செலுத்த முடியுமாக இருக்கும்.

கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையும் இடம்பெறவுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்-என்றார். (அ)

## அதிகூடிய...

போதியளவு நிதி ஒதுக்கீடும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து எமக்கு கிடைக்கப் பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு- வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒழுங்கிணைப்புக் குழுக் கூடத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மாகாண சபைகள் அதிகூடிய அதிகாரங்களுடன் போதியளவு நிதி வளத்துடன் இயங்குமேயானால் மாகாண சபைகளுக்கு உள்ளே காணப்படுகின்ற சகல நிறுவனங்களும் ஆளணிப் பற்றாக்குறையற்ற நிர்வாக திறன் உள்ள மக்கள் சேவையுள்ள அலுவலகங்களாக இயங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மத்திய அரசின் கீழ் உள்ள நிறுவனங்களில் மேலதிக ஆளணிகளும், மேலதிக பண வளமும் வரவு-செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியினால் மேற்கொள்ளப் படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாகாண சபையில் உள்ள நிறுவனங்களுக்கு இவ்வாறான வளங்கள் பகிர்ந்தளிக்கப்படாமையே உரிய காரணமாகும் எனவும் தெரிவித்த அவர், இவ்வாறான குறைகளைக் களைந்து கிழக்கு மாகாணம் வினைத்திறன் உள்ள சேவையை வழங்ககூடிய ஓர் அரச நிர்வாக கட்டமைப்புக்கு உட்படுத்த வேண்டுமானால் அதி கூடிய அதிகார பரவலாக்கலும் போதியளவு நிதி ஒதுக்கீடும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து எமக்கு கிடைக்கப் பெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதி...

பூர்வாங்கக் கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அமைச்சுகளின் செயலர்கள், அரசாங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

## ஐ. நா. வதிவிட..

ஐக்கிய நாடுகள் அமைப்புக்களின் தலைவர்கள் குழுவினர் வடக்குக்கு விஜயம் செய்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து குழுவினர் பல இடங்களுக்கும் விஜயம் செய்தனர்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகளின் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ நேற்று டான் தொலைக்காட்சி அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

ஸ்பொற்லைட் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அவர், கலையகத்தை பார்வையிட்டதுடன் உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடினார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையில் கால் பதித்து 70 வருட நிறைவை கொண்டாடும் நிலையில், 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர், இலங்கையில் பணிபுரியும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்களின் தலைவர்கள் குழுவினர் வடக்குக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கு காற்றா...

வெளிப்படுத்தியிருந்தது.

திட்டத்தில் இருந்து விலகுவது குறித்து அதானி குழுமம் பெப்ரவரி 12ஆம் திகதி வெளியிட்டிருக்கும் கடிதத்தில், "புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு குழுவை இலங்கை அரசு நியமித்துள்ள நிலையில், இலங்கையின் இறையாண்மை மற்றும் அதன் விருப்பத்துக்கு மதிப்பு அளிக்கும் வகையில், ஏற்கனவே கூறப்பட்ட திட்டத்தில் இருந்து விலகிக்கொள்ள அதானி குழுமம் முடிவு செய்துள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதி நகரங்களான மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் 484 மெகா வாட் அளவு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உருவாக்கும் வகையில் காற்றாலை பண்ணைகளை உருவாக்கும் வகையில் இலங்கை மின்சார சபையுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நீடித்த விவாதங்கள் நடத்தப்பட்டன. தானே உருவாக்கி இயக்கும் இந்த திட்டத்துக்கு சுமார் ரூ.1 பில்லியன் டாலர் முதலீடு தேவைப்படும்" என்று அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இலங்கை துறைமுக ஆணையம் மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் ஆகியவைகளுடன் இணைந்து அதானி குழுமம், இலங்கை துறைமுகத்தில் மேற்கு முனையம் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கையின் வடக்கு பகுதியில் தொடங்கப்பட இருந்த காற்றாலை திட்டம், எந்த விதமான போட்டியாளரும் இன்றி அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த ரணில் விக்கிரமசிங்க அரசும் அந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தை முன்னெடுத்தது.

இதனிடையே, இலங்கையின் எரிசக்தி துறைக்குள் அதானி நிறுவனம் பின்வாசல் வழியாக நுழைந்துவிட்டது என்று எதிர்த்கட்சிகள் குற்றஞ்சட்டின. அதேபோல் மன்னார் பகுதிவாசிகள் மற்றும் செயல்பாட்டாளர்கள், முக்கியமான பறவைகள் சரணாலயம் மற்றும் பிற சுற்றுச்சூழல் இடர்பாடுகளை சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளனர்-என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மகிந்தவின் இல்லத்துக்கு நீர் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, பெப். 14

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஜயராம உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்புப் படையினர் தங்கியிருக்கும் பகுதியில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மூன்று இலட்சம் ரூபாய் நிலுவைத் தொகையை செலுத்தாத காரணத்தால் இவ்வாறு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியிருக்கும் பகுதியில் நீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கான நீர் கட்டணமானது ஜனாதிபதி செயலகத்தால் செலுத்தப்பட்டு வருவதாக மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார். (அ)

## உரமானியத்தை பெற்றால் பாதி விளைச்சல் அரசுக்கு

கொழும்பு, பெப். 14

உரமானியம் பெற்றுக் கொள்ளும் விவசாயிகளின் விளைச்சலில் பாதியை அரசாங்கத்துக்கு விற்பனை செய்வதை கட்டாயப்படுத்தும் சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளதாக அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சட்ட மூலமொன்றை உருவாக்குமாறு பல்வேறு தரப்புகளிடமிருந்தும் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையே அரசாங்கம் விதித்துள்ள நெல் கொள்வனவு விலை போதுமானதாக இருப்பதாக வடமத்திய விவசாயிகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் நெல் கொள்வனவு விலை போதுமானதாக இல்லை என்று நாட்டின் ஏனைய பிரதேச விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் வடமத்திய மாகாண விவசாயிகள் அமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (அ)

## கைவிட்ட வேலைத் திட்டங்களை நிறைவு செய்வதில் சிக்கல்நிலை

கொழும்பு, பெப். 14

கடந்த அரசாங்க காலத்தில் இடைநடுவே கைவிடப்பட்ட வேலைத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாலங்கள், வளைவுகள் மற்றும் கிராமப்புற வீதிகள் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக துறைசார் பிரதியமைச்சர் ருவன் செனவிரத்ன குறிப்பிட்டார்.

இந்த வேலைத் திட்டங்களுக்கான நிர்மாணப்பணிகள் உரிய திட்டமிட்டமின்றி ஆரம்பிக்கப்பட்டமையினால் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் சிக்கல் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுனார்.

இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் வரவு - செலவு திட்டத்தின் ஊடாக இடைநடுவே கைவிடப்பட்ட அனைத்து வேலைத் திட்டங்களையும் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு கடத்தவிருந்த இஞ்சி இந்தியாவில் பறிமுதல்

சென்னை, பெப். 14

இந்தியா தமிழ்நாடு இராமநாதபுரம் கடல் வழியாக, இலங்கைக்கு கடத்தப்பட இருந்த இஞ்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை, திருப்புல்லாணி அடுத்த தோப்பு வலசை கடற்கரையில் இருந்து படகு மூலமாக இஞ்சி இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 50 இஞ்சி மூட்டைகள் கடற்கரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மருத்துவ பொருட்களுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை!

### பெரும் சிரமத்தில் நோயாளிகள்

கொழும்பு, பெப். 14

**அறுவைச் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளுக்குத் தேவையான அடிப்படை மருத்துவ பொருட்கள் பலவற்றுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவி வருவதாக அறியக் கிடைத்துள்ளது.**

சில விடுதிகளில் பிளாஸ்டர்கள் உள்ளிட்ட அடிப்படை மருந்துப் பொருட்களை வெளியில் இருந்து கொண்டு வருமாறு துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளதாக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், தொற்று அல்லாத நோய் வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் இன்சுலின் மற்றும் கொலஸ்ட்ரால் மாத்திரைகள் உள்ளிட்ட முக்கிய மருந்துகளின் பற்றாக்குறை காரணமாக, இந்த மருந்துகளை வெளியில் இருந்து வாங்குவதற்கு அதிக அளவு பணம் செலவிட வேண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அறுவைச் சிகிச்சை செய்வதற்கு முன்பு சில ஆய்வக சோதனைகளை செய்வதற்கு கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய் செலுத்தவேண்டியிருப்பதாகக் கூறும் நோயாளிகள், கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் இந்த பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை என்றும், சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர். (அ)

## ஆளும் தரப்பினரே எமது வீடுகளுக்கு தீ வைத்தனர்

### காமினி லொக்குகே குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 14

மே 09 வன்முறையில் எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது. வீட்டை புனரமைக்க 54 மில்லியன் ரூபாவை இழப்பீடாக பெற்றுக் கொண்டேன். இழப்பீடு தொகையை பற்றி பேசும் ஆளும் தரப்பினரே எமது வீடுகளுக்கு தீ வைத்தனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பிலியந்தல பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற அமைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மே 09 வன்முறையில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுடன் தான் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 150 மில்லியன் ரூபா செலவழித்து நான் வீட்டை நிர்மாணித்தேன். கலவரத்தின் போது எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

ஆகவே வீட்டை நிர்மாணிப்பதற்கு 54 மில்லியன் ரூபாவை இழப்பீடாக பெற்றுக் கொண்டேன்.இதில் யாருக்கு என்ன பிரச்னை. இழப்பீட்டு தொகை பெற்றுக் கொண்ட அரசியல்வாதிகளின் பெயர் விவரங்களை வெளியிடும் தரப்பினர்கள் தான் எமது வீடுகளுக்கு தீ வைத்தார்கள். முடிந்தால் அவர்களின் பெயர்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

## பாரதியின் உடல் தீயுடன் சங்கமம்



யாழ்ப்பாணம், பெப். 14

மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இறுதிச் சடங்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தமிழ் ஊடகப்பரப்பில் 40 ஆண்டுகளுக்கு மேல் ஊடக அனுபவத்தை கொண்ட மூத்த ஊடகவியலாளர் பாரதி உடல் நலக்குறைவு காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் பாரதியின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை இறுதிக் கிரியைகள் மற்றும் அஞ்சலி உரைகள் இடம்பெற்று, தகன கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் புகழுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. (அ)

## கைவிடப்பட்ட அருங்காட்சியகம்

கொழும்பு, பெப். 14

கடுகண்ணாவை ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ரயில் அருங்காட்சியகம் தற்போது கவனிப்பாரற்றுக் காணப்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக சுற்றுலா பயணிகள் அதனைப் பார்வையிடக் கூடிய சூழல் இல்லை என கூறப்படுகின்றது.

மேற்படி ரயில் அருங்காட்சியகத்தில் இலங்கையில் முதலாவதாக சேவையில் அமர்த்தப்பட்ட ரயில் இயந்திரம், அதேபோன்று பழைய ரயில் பெட்டி உட்பட பல்வேறு அம்சங்கள் ஞாபகார்த்தமாக இதில் வைக்கப்பட்டுள்ளன. இதனை இலங்கை ரயில் திணைக்களமே நிர்வகித்து வந்தது.

இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்காது போனால் மிகக் குறுகிய காலத்தில் மேற்படி அருங்காட்சியக உபகரணங்கள் இத்துப் போய் பழைய இரும்புக் கடைக்கு விற்கவேண்டிய நிலை ஏற்படும் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## கால்பந்து கோல் கம்பம் சரிந்து 11 வயது மாணவன் உயிரிழப்பு!

### பொலநறுவையில் துயர சம்பவம்

கொழும்பு, பெப். 14

பொலநறுவை, தல்பொத பகுதியைச் சேர்ந்த 11 வயது மாணவர் ஒருவர், பாடசாலை விளையாட்டு மைதானத்திலிருந்த கால்பந்து கோல் கம்பம் சரிந்து விழுந்ததில் உயிரிழந்தார்.

பொலநறுவையில் உள்ள ஒரு பாடசாலையில் தரம் 6 இல் கல்வி கற்கும் கவிந்து தெனுவன், நேற்றுமுன் தினம் மாலை தனது அக்காவின் விளையாட்டுப் போட்டியைக் காணத் தனது தாயாருடன் பொலநறுவை தோபாவெவ மகா வித்தியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள இந்த மைதானத்துக்கு சென்றார்.

தனது தாயாருடன் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த கவிந்து, மைதானத்திலிருந்த கோல் கம்பத்தை அகற்ற ஒரு குழு வருவதைக் கண்டு அவர்களுடன் சேர்ந்து சென்றுள்ளார்.

கோல் கம்பத்தைத் தூக்க முயன்றபோது, ஒரு பக்கம் துருப்பிடித்திருந்த கோல் கம்பத்தின் ஒரு பகுதி கவிந்துவின் தலையில் விழுந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அந்த நேரத்தில், சம்பந்தப்பட்ட தரப்பினர் மாணவனை பொலநறுவை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் சென்றபோது மாணவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவரின் பெற்றோர் அவரது கண்கள் உட்பட உடல் உறுப்புகளை தானம் செய்யத் தீர்மானித்துள்ளனர். (அ)

## வடக்கில் சுகாதார சேவைகளை வலுப்படுத்த ஜப்பான், ஐ.நா.மக்கள் தொகை நிதியம் ஆதரவு

கொழும்பு, பெப். 14

ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் ஆகியன இணைந்து வடக்கு மாகாணத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் திட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன.

சுகாதார அமைச்சகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இந்த திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதர் அகியோ இசோமடா கடந்த 12 ஆம் திகதி வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஊர்காவற்துறை வைத்தியசாலையில் வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதற்கு 34,089,250 ரூபாய் நிதியுதவியின் கீழ் பல்வேறு சுகாதார வசதிகளை வழங்கினார்.

இந்த திட்டத்தின் மூலம் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஆரோக்கியமான கர்ப்பங்கள் மற்றும் பாதுகாப்பான பிரசவங்களை உறுதி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org